# Assistant Medical Officer - Siddha

| | Sr. No. | Question Body and Alternatives |
|---|---|---|
| 1 | 1 | ஐம்பூதக் கூறு பொருள்களில் குடலிலுள்ள தோடங்களை மேல்நோக்கி வாந்தி செய்விப்பது எது?<br><br>A) மண் கூறு பொருள்<br><br>B) புனல் கூறு பொருள்<br><br>C) விண் கூறு பொருள்<br><br>D) அனல் கூறு பொருள் |
| 2 | 2 | மாயையினால் சீவர்களுக்கு உண்டாகும் அவத்தைகள் எத்தனை?<br><br>A) 5<br><br>B) 3<br><br>C) 7<br><br>D) 2 |
| 3 | 3 | ஐந்து கோசங்களின் பிணைப்பால் உண்டான உடலில் பருஉடல் எவ்வாறு கூறப்பெறுகிறது?<br><br>A) அன்னமய கோசம்<br><br>B) ஆனந்த மய கோசம்<br><br>C) விஞ்ஞான மய கோசம்<br><br>D) போகதனு |
| 4 | 4 | நீர் மேல் நடப்பதற்கும், விண்ணில் உலாவுவதற்கும் உதவும் சித்தி எது?<br><br>A) மகிமா<br><br>B) கரிமா<br><br>C) அணிமா<br><br>D) இலகிமா |
| 5 | 5 | பிரம்மமே ஆன்மா என்னும் கொள்கை<br><br>A) சூனிய வாதம் |

B) தேகான்ம வாதம்

C) பிரமாத்தும வாதம்

D) இலிங்கசர ஆன்ம வாதம்

6 6 எந்த நெய்யினால் அறிவு, அழகு, கண்ணொளி மத்திமமாகும்?

A) செம்மறியாட்டு நெய்

B) எருமை நெய்

C) பசு நெய்

D) வெள்ளாட்டு நெய்

7 7 மனோசிலை வைப்பு சரக்காக செய்வதற்கு சேரும் சரக்குகள் யாவை?

A) வெள்ளைப் பாடாணம், இலிங்கம்

B) கந்தகம், இலிங்கம்

C) கந்தகம், இரசம்

D) வெள்ளைப்பாடாணம், கந்தகம்

8 8 மனோசிலை மாத்திரை வழங்க எந்நோய் தீரும்?

A) வலிப்பு

B) குளிர் சுரம்

C) கிரந்தி

D) குழிவாழை

9 9 குற்றமுள்ள இரசம் பெரிதும், குற்றமுள்ள கந்தி சிறிதும் சேர எதுவுண்டாகும்?

A) தாம்பிரம்

B) அயம்

C) வெள்ளீயம்

D) காரீயம்

10 10 கருவங்கத்தின் நட்பு சரக்கு எது?

A) அயம்

B) வெள்ளி

C) காந்தம்

D) கௌரி

11 11 "... சிங்கியென்ற மிருதாரு சிங்கியோடு
திறமான மூன்று வகைச் சிங்கியாச்சு... "
என்று எந்நூலில் கூறப்பட்டுள்ளது

A) போகர் ஏழாயிரம்

B) போகர் காரசாரத்துறை

C) பச்சை வெட்டு பதினாறு

D) நந்தீசர் கலைஞானம்

12 12 உலகு, உடல், உயிர்களை தாங்கும் ஆதார ஆற்றல் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) பராசக்தி

B) மாசக்தி

C) தராசக்தி

D) உணராவுரு சக்தி

13 13 அநாதி விலரசம் எனப்படுவது யாது?

A) விலரசம்

B) தாதுரசம்

C) திசுரசம்

D) கருவிலரசம்

14 14 "தேகமே யங்க பங்கம்
மேவுறுந் சூலை பிரமை.... "
எந்த வேகத்தை அடக்கினால் இக்குறிகுணங்கள் தோன்றும்

A) நித்திரை

B) கொட்டாவி

C) நீர்வேட்கை

D) பசி

15 15 பிரகிருதி மாயை எத்தனை வகைப்படும்

A) 24

B) 20

C) 18

D) 22

16 16 மலவாசல்களின் நரம்புகளின் இயக்கமாக நடைபெறும் நாடி எது?

A) சிகுவை

B) சங்கினி

C) குகு

D) அத்தி

17 17 கற்றாழை மணத்தை அகற்றும் பூ

A) வேப்பம் பூ

B) அகத்திப் பூ

C) தூதுளம் பூ

D) ஆவாரைப் பூ

18 18 “சுத்த அனிலமந்தத் தோன்றுமெரி பித்தம்போம்
பத்தியத்தி லெண்ணார்கள் பண்டிதர்கள்.... ”
இவ்வரிகள் சிறப்பாகக் கூறும் அரிசி வகை யாது?

A) குன்றிமணிச்சம்பா

B) பச்சரிசி

C) சீரகச் சம்பா

D) புழுங்கலரிசி

19 19 இளவேனில் காலம் என்பது?

A) மார்கழி, தை

B) ஐப்பசி, கார்த்திகை

C) சித்திரை, வைகாசி

D) ஆனி, ஆடி

20 20 கண், செவி நோய்களுக்கு இடுகின்ற நெய்களை காய்ச்ச பயன்படும் விறகு எது?

A) ஆவாரை, சிற்றாமுட்டி

B) உசிலம், இயற்கை விறகுகள்

C) ஆவாரை, நொச்சி

D) சிற்றாமுட்டி, இலந்தை

21 21 வீடு அமைக்கையில் மூன்றாம் திட்டப்படி வருணன் மூலையில் அமையும் அறை எது?

A) சயன அறை

B) புசிக்கும் அறை

C) சாஸ்திரம் வைக்கும் அறை

D) பசுத்தொழுவம்

22 22 “நீளுமதி தாகத்தை நீங்கா முத் தோடத்தை
ஆளுவிக்கல் பித்தத்தை யாற்றுங்காண்.... ”
என அகத்தியர் குணவாகடம் குறிப்பிடும் மூலிகை யாது?

A) உருத்திரச்சலை

B) உப்பிலாங்கொடி

C) உருத்திராட்சம்

D) உத்தாமணி

23 23 கீழ்க்கண்டவற்றுள் எந்த மூலிகை இனிப்பு, சிறு கைப்பு சுவையுடையது?

A) மருக்கொழுந்து

B) புளிச்சி

C) புங்கு

D) நீர்முள்ளி

24 24 கீழ்க்கண்டவற்றுள் இதை தவிர மற்றவகை நஞ்சுக்கு சர்க்கரை மிகச் சிறப்பான நஞ்சு முறிவாகும்?

A) செம்பு

B) பூரம்

C) வீரம்

D) வெள்ளைப்பாடாணம்

25 25 மந்தார இரைப்பு போக்கும் மூலிகை எது?

A) காரபி

B) அசமோதம்

C) கோரங்கம்

D) சிறுதேக்கு

26 26 பொருத்துக :

| | |
|---|---|
| (a) தாபசுரம் | 1. சீந்தில் |
| (b) கட்டுமாந்தசுரம் | 2. சுக்கு |
| (c) தோஷ சுரம் | 3. கடம்பு |
| (d) சன்னி வாத சுரம் | 4. சிற்றாமுட்டி |

A) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

B) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

C) (a) 2 (b) 1 (c) 4 (d) 3

D) (a) 3 (b) 1 (c) 4 (d) 2

27 27 கீழ்க்கண்டவற்றுள் எந்தக் கீரை அடிதள்ளல் நோய்க்கு வழங்கப்படுகிறது?

A) முள்ளிக்கீரை

B) புளியாரை

C) புதினா

D) மணலிக்கீரை

28 28 ஹார்ட்னப்ஸ் நோய் (Hartnups disease) எந்த அமினோ அமிலத்துடன் தொடர்புடையது?

A) மெதியோனின்

B) ட்ரிப்டோபேன்

C) லைசின்

D) அலனின்

29 29 எந்த மூலக்கூறிலிருந்து ஸ்டீராய்டல் ஹார்மோன்கள் உருவாக்கப்படுகிறது?

A) டைரோசின்

B) கிளிசிரால்

C) கொலஸ்டீரால்

D) டிரிப்டோபேன்

30 30 காலக்டோஸ் டாலரன்ஸ் சோதனை எந்த உறுப்பின் தொழிலை அறிய உதவுகிறது?

A) இரைப்பை

B) கணையம்

C) கல்லீரல்

D) சிறுநீரகம்

31 31 'க்ரோத் ஹார்மோன்' வேலை திசுக்களில் நடைபெற எந்த மூலக்கூறு தேவைப்படுகிறது?

A) சோமெட்டோஸ்டேடின்

B) சோமெட்டோமிடின் 'ஓ'

C) சோமெட்டோமிடின் 'சி'

D) சோமெட்டோடிரோபின்

32 32 எந்த குடும்ப மலர்களின் அல்லி இதழில் பிலிகேட் தடிப்பு உள்ளது?

A) போரோஜினேசியே

B) கன்வால்வுலேசியே

C) அஸ்கிலிபியடேசியே

D) ஜின்ஜிபெரேசியே

33 33 கீழ்கண்ட எந்த தாவரத்தின் மகரந்தபை நுனி துளைகள் வழியாக மகரந்தத் தூள்கள் வெளியேறுகின்றன?

A) தத்தூரா வகைகள்

B) ஹைபிஸ்கஸ் வகைகள்

C) சொலானம் வகைகள்

D) நீரியம் வகைகள்

34 34 போயேசியே குடும்பத்தில் பூவிதழ்கள் உருமாறியதற்கு என்ன பெயரிட்டு வழங்கப்படுகிறது?

A) ரேகில்லா

B) கேரியோப்சிஸ்

C) லாடிகியூல்கள்

D) யுட்ரிகள்

35 35 எந்த தாவரத்தின் இலைகளில் இருந்து கொசுக்களை கொல்லும் பைரீத்ரின் வேதிப்பொருள் எடுக்கப்படுகிறது?

A) கிரைசாந்திமம் சைனிரியே ஃபோலியம்

B) மைமோசாப்ஸ் இலஞ்சி

C) கேராந்தஸ் டிஸ்டோரியஸ்

D) வெர்னோனியா ஆந்தெல்மின்டிகா

36 36 ஏட்ரியல் சிஸ்டோலின் கால அளவு என்ன?

A) 0.27 second

B) 0.53 second

C) 0.11 second

D) 0.70 second

37 37 கீழ்கண்டவற்றில் எது HCl உற்பத்தியை இரைப்பையில் குறைக்கிறது?

A) கேஸ்டிரின்

B) ஹிஸ்டமைன்

C) செக்ரிட்டின்

D) வேகஸ் தூண்டுதல்

38 38 இயங்கு தசையிழைகளில் ஆக்டின் மற்றும் மையோசின் இழைகளின் விகிதம் என்ன?

A) 1:1

B) 1:2

C) 2:1

D) 1:0

39 39 உயரமான மலை பிரதேசங்களில் ___________?

A) சிவப்பணுக்கள் உருவாக்கம் குறையும்

B) சிவப்பணுக்கள் உருவாக்கம் அதிகரிக்கும்

C) சிவப்பணுக்கள் உருவாக்கம் முழுதும் இருக்காது

D) சிவப்பணுக்கள் சிதைவுறும்

40 40 இரைப்பை குடல் மண்டலத்திலிருந்து கொழுப்பு மிகுதியாக உறிஞ்சப்படும் வழி

A) வீனஸ் சிஸ்டம்

B) ஆர்டீரியல் சிஸ்டம்

C) பிலியரி சிஸ்டம்

D) லிம்பாட்டிக் சிஸ்டம்

41 41 கருத்தடை முறைகளை பற்றி கூறும் நூல் எது?

A) அகத்தியர் வாத காவியம்

B) அகத்தியர் பரிபூரணம்

C) யூகி வைத்திய சிந்தாமணி

D) தேரையர் யமக வெண்பா

42 42 சினைப்பாதையின் அக அந்தத்தின் நீளம் என்ன?

A) 2 cm

B) 1.25 cm

C) 1.50 cm

D) 2.5 cm

43 43 சூல்காலத்தில் உடலில் தேக்கமடையும் நீரின் அளவு என்ன?

A) 7.5 லி

B) 10 லி

C) 5 லி

D) 12 லி

44 44 அகத்தியர் கருத்தரிக்காமல் இருக்க முதல் மகப்பேற்றின் பனிநீரிலிருந்து எடுக்கப்பட்ட உப்பாகிய முப்பை எத்தனை நாள் கொடுக்க அறிவுறுத்துகிறார்?

A) 7

B) 2

C) 1

D) 3

45 45 பிறப்புறுப்புகளில் புற்றுநோய் தோன்றி வளர்கின்ற காலங்களில் ஏற்படும் குறிகுணம் எது?

A) வயிற்றுவலி

B) தலைவலி

C) முதுகுவலி

D) கால்வலி

46 46 சூல்காலத்தில் மகவின் இதய ஒலியை எந்த வாரத்தில் கேட்கலாம்?

A) 10 முதல் 11 வாரங்கள்

B) 17 முதல் 20 வாரங்கள்

C) 25 முதல் 32 வாரங்கள்

D) 11 முதல் 15 வாரங்கள்

47 47 “ஆயில் அடுபுனல் அனலை அடு நெறி... ”
என்னும் அடி இடம்பெறும் நூல் எது?

A) தேரன் யமக வெண்பா

B) திருக்குறள்

C) தேரன் கரிசல்

D) திருமந்திரம்

48 48 “வேம்பு” கற்பமாக உண்ண இந்த நட்சத்திரத்தில் நல்ல நாள் பார்த்து உண்ணலாம் என சொல்லப்பட்டிருக்கிறது?

A) பரணி

B) விசாகம்

C) உரோகிணி

D) திருவாதிரை

49 49 “பாத முழந்தாளிற் பாணிகளை நீட்டி
ஆதர வோடும் வாய்... ”
என்னும் திருமந்திர பாடல் வரி எந்த ஆசனத்தை விளக்குகிறது?

A) சிங்காதனம்

B) பத்திராசனம்

C) குக்குடாசனம்

D) பாத ஹஸ்தாசனம்

50 50 செங்கரும்பின் சாற்றை இந்த நோய்க்கு வழங்கலாம்?

A) உன் மாதம்

B) மதாத்தியம்

C) மதநோய்

D) வலிப்பு

51 51 “40 நாட்களுக்குள் ஆள் ஒரு முழம் குறுகிப் போவான்” – எந்த வர்மத்தின் குறிகுணம்?

A) அடப்பக் காலம்

B) சுருக்கிக் காலம்

C) அத்தி சுருக்கிக் காலம்

D) திவளைக் காலம்

52 52 “பெண்கள் சூல் கொண்ட போதும், தீட்டான காலத்தும் செய்ய கூடாது” – என கூறப்பட்டுள்ள
ஆசனம் எது?

A) சவாசனம்

B) சலபாசனம்

C) சக்கராசனம்

D) சிரசாசனம்

53 53 குழந்தைகளில் ஏற்படும் புறக்காரண நோய்களில் சீறிச்சீறி அழுதல், விக்கல், பொருமலுக்கு கொடுக்கப்படும் மருந்து என்ன?

A) கண்டுபாரங்கி

B) அதிமதுரம்

C) வெள்ளைப் பூண்டு

D) சாதிக் கோட்டம்

54 54 குழந்தைகளில் உண்டாகும் தொண்ணுற்றாறு (96) வகை கரப்பானுக்கு கொடுக்கப்படும் மருந்து எது?

A) விடதாரி எண்ணெய்

B) கரிசாலை எண்ணெய்

C) இலுப்பை எண்ணெய்

D) குன்றி எண்ணெய்

55 55 குழந்தைகளுக்கு ஏற்படும் எந்த வகை நோயில் கண் பச்சை நிறம் அடையும்?

A) வரட்காமாலை

B) மஞ்சட்காமாலை

C) ஊது காமாலை

D) அழல் ஊதல்

56 56 குழந்தைகளுக்கு உண்டாகும் எவ்வகை கணத்தில் சுரம் ஒவ்வொரு சாமம் (3 மணி நேரம்) விட்டும், ஒவ்வொரு சாமம் (3 மணி நேரம்) காய்வதுமாக இருக்கும்?

A) வீக்ககணம்

B) கொதிப்பு கணம்

C) ஆம கணம்

D) வளி கணம்

57 57 கீழ்கண்டவற்றில் குழந்தைகளின் கழிச்சலுக்கு கொடுக்கப்படும் மருந்து எது?

A) தேற்றான் கொட்டை லேகியம்

B) நெல்லிக்காய் லேகியம்

C) வச்சிரகண்டி லேகியம்

D) மணித்தக்காளி கற்கம்

58 58 குழந்தைகளுக்கு உண்டாகும் கண நோயில் கொடுக்கப்படும் மருந்துகளில் மதிமயக்கி வேர்ப்பட்டை சேரும் மருந்து எது?

A) வல்லாரை நெய்

B) புங்கு ஈர்க்கு முடிக் குடிநீர்

C) உள்ளிக் குடிநீர்

D) குமிழ் வேர் எண்ணெய்

59 59 கீழ்கண்ட எந்த வகை கல்லடைப்பு நோயில் வெளிப்படும் கல் செம்மை கலந்த மஞ்சள் நிறமாயிருக்கும்?

A) வளிக் கல்லடைப்பு

B) ஐயக் கல்லடைப்பு

C) அழற் கல்லடைப்பு

D) வெண்ணீர் கல்லடைப்பு

60 60 சிறுநீரக கல்லடைப்பு நோயில் எந்த வகை சிறுநீரக கற்கள் பெரிதாகி மான் கொம்பு வடிவ கற்களாக உருமாறுகின்றன?

A) ஆக்ஸலேட் கற்கள்

B) பாஸ்பேட் கற்கள்

C) யூரிக் ஆசிட் கற்கள்

D) சிஸ்டைன் கற்கள்

61 61 குற்றங்களை பொருந்தி புண்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?

A) 15

B) 45

C) 16

D) 10

62 62 மூலத்தில் இரத்தம் வடிவதற்கு எது மிகவும் சிறந்தது?

A) கச்சப இலேகியம்

B) நத்தை இலேகியம்

C) கருணைக் கிழங்கு சூரணம்

D) கோப்பிரண்டைச் சூரணம்

63 63 ஒரு கட்டி உண்டாகி அதை சுற்றி அநேக கொப்புளங்கள் சூழ்ந்து எரிச்சலையும் வருத்தத்தையுந் தரும் – இது எந்த வகை மேகக் கட்டி

A) கடுகுக் கட்டி

B) மடக்குக் கட்டி

C) வித்திரதிக் கட்டி

D) வலைக்கண் கட்டி

64 64 அகத்தியர் நயன விதிப்படி வெள்விழி நோய்களில் எழுச்சி எத்தனை வகையாக சொல்லப்பட்டுள்ளது?

A) 2

B) 5

C) 3

D) 4

65 65 சூல் கொண்ட பெண்களுக்கு உண்டாகும் வாத நோயின் வகை எது?

A) சித்து வாத சுரோணிதம்

B) கண்டக அவதானகம்

C) அட்டசூலை

D) யோனி சூலை

66 66 "வாயில் நெய் பூசியது போல் குழ குழத்தல்" எந்த வகை வாந்தி நோயில் காணப்படும்?

A) எரு வாந்தி

B) ஐய வாந்தி

C) வளி வாந்தி

D) புழு வாந்தி

67 67 தமக்க சுவாசம் எந்த வகை இரைப்பு நோயின் வேறுபெயர்?

A) ஐய வளி இரைப்பு நோய்

B) முக்குற்ற இரைப்பு நோய்

C) வளி இரைப்பு நோய்

D) ஐய இரைப்பு நோய்

68 68 யூகி சிந்தாமணியில் கூறியபடி அம்மை எத்தனை வகைப்படும்?

A) 13

B) 14

C) 12

D) 25

69 69 பேராமுட்டியும் சுக்கும் ஓரளவாக கூட்டி முறைப்படி குடிநீரிட்டு கொடுக்க எவ்வகை சுரம் நீங்கும்?

A) குளிர் சுரம்

B) துன்ப சுரம்

C) முறை சுரம்

D) புழுச் சுரம்

70 70 ‘‘மத்தள ஒலியையும், வானம் குமுறும் ஒலியையும் போன்ற ஒலிகள் எப்போதும் செவியில் ஒலித்துக் கொண்டே இருக்கும்’’ – எவ்வகை சுரத்தில் இக்குறிகுணங்கள் தோன்றும்?

A) நளிர் சுரம்

B) அழலையச் சுரம்

C) ஐயச் சுரம்

D) வளி ஐயச் சுரம்

71 71 எந்த பொருத்தில் அகப்பக்க விசி (Deltoid ligament) காணப்படுகிறது?

A) காற்குழச்சு பொருத்து (ankle joint)

B) முழங்கைப் பொருத்து (elbow joint)

C) தோள் பொருத்து (shoulder joint)

D) முழந்தாள் பொருத்து (knee joint)

72 72 எந்த என்பு வாள் போன்ற ஒடுங்கிய தகட் டெலும்பாக இருக்கும்?

A) செத்துரு என்பு (Clavicle)

B) நெஞ்செனப்பு (Sternum)

C) தனுர் என்பு (Hyoid)

D) பழு என்பு (Rib)

73 73 கீழ்கண்டவைகளில் எது வயிற்றறையின் பின்பக்க சுவற்றின் நிணநீர் கோளம் (lymph gland) அல்ல?

A) அயோர்டிக் குரூப் (Aortic Group)

B) வெளி இலியாக் (External Iliac)

C) டீப் இங்குவைனல் (Deep Inguinal)

D) பொது இலியாக் (Common Iliac)

74 74 மணிக்கட்டில் உள்ள பேசிகளில் அனைத்து பேசிகளும் மடக்கி பேசிகள் (Flexor muscles) – இந்த ஒன்றை தவிர

A) இரத்தனி குளசு மடக்கி (Flexor Carpi ulnaris)

B) சாய்புரட்டி (Pronator Teres)

C) ஆரைக்குளசு மடக்கி (Flexor Carpi radialis)

D) விரல் வெளி மடக்கி (Flexor digitorum superficialis)

75 75 கீழ்கண்டவைகளில் எது ஹைபிரிட் பேசி (Hybrid muscle)?

A) கிரேசிலிஸ் (Gracilis)

B) அடக்டார் லாங்கஸ் (Adductor longus)

C) அடக்டார் மேக்னஸ் (Adductor Magnus)

D) அடக்டார் பிரிவிஸ் (Adductor Brevis)

76 76 மூக்கு மைய தடுப்பின் (Nasal Septum) கீழ்ப்பகுதியின் வரம்பின் பெயர் என்ன?

A) காலுமெல்லா (Columella)

B) வோமெர் (Vomer)

C) க்யூடிகுலார் பகுதி (Cuticular)

D) கீழ்மூக்கு முருந்து (Inferior Nasal Cartilage)

77 77 எந்த நாடி ஜெஜீனம் (Jejunum) மற்றும் இலியத்தினை (Ileum) போஷிக்கிறது?

A) கீழ் மதியாந்திர நாடி – (Inferior messentric artery)

B) மேல் மதியாந்திர நாடி (Superior messentric artery)

C) உள் கூபக நாடி (Internal Pelvic artery)

D) வெளி கூபக நாடி (External Pelvic artery)

78 78 பின்வருவனவற்றில் எந்த ஒன்று பல்லின் பகுதி அல்ல?

A) வேர்

B) கழுத்து

C) க்ரௌன்

D) ஜின்ஜிவே

79 79 உணவு மண்டலப் பாதையின் இரண்டாவது குறுகிய பகுதி எது?

A) நிகரணத்தின் (பாரிங்க்ஸ்) மேல் முனை

B) நிகரணத்தின் (பாரிங்க்ஸ்) கீழ் முனை

C) இலியோ சீக்கல் இணைப்பு

D) நாங்கூழ்

80 80 பரோடிட் நாளத்தின் (டக்ட்) பெயர் மற்றும் நீளம் என்ன?

A) வார்ட்ன் ‘ ஸ் டக்ட் (Wharton’s duct), 7 செ.மீ

B) ஃபரேய் ‘ ஸ் டக்ட் (Frey’s duct), 7 செ.மீ

C) ஸ்டென்சன் ‘ ஸ் டக்ட் (Stensen’s duct), 5 செ.மீ

D) டச் டக்ட் (Duch duct), 6 செ.மீ

81 81 உடலில் எதிர்ப்பு சக்தி எத்தனை வகைப்படும்?

A) 3 வகைகள்

B) 2 வகைகள்

C) 4 வகைகள்

D) 5 வகைகள்

82 82 சென்ட்ரோமியர் சரியாக நடுவில் உள்ள க்ரோமோசோம்கள் எவ்வாறு அழைக்கப்படும்?

A) சப் மெட்டா சென்ட்ரிக்

B) மெட்டா சென்ட்ரிக்

C) அக்ரோ சென்ட்ரிக்

D) சப் அக்ரோ சென்ட்ரிக்

83 83 கீழ்கண்டவற்றில் எந்த நிலையில் "லைன் ஆஃப் செப்பரேஷன்" காணப்படும்?

A) டிரை கான்கிரீன்

B) வெட் கான்கிரீன்

C) டிஸ்பிலேசியா (Dysplasia)

D) ஃபேட்டி லிவர்

84 84 கீழ்கண்டவற்றுள் ஆராக்கிடோனிக் ஆசிட் மெட்டா போலைட் எது?

A) ஹிஸ்டமின்

B) நைட்ரிக் அமிலம்

C) சைட்டோகைன்

D) ப்ரோஸ்டாகிளான்டின்

85 85 கீழ்கண்டவற்றுள் ப்ரோ – அபாப்டோடிக் (Pro - Apoptotic) புரதம் எது?

A) பிசிஎல் – எக்ஸ்

B) பிசிஎல் – 2

C) பிஐடி

D) பிசிஎல்

86 86 அரையாப்பு நோய்க்கான மணிக்கடை நூலின் அளவு யாது?

A) ஒன்பதே முக்கால்

B) ஏழரை

C) ஆறு

D) எட்டே முக்கால்

87 87 சமான வாயு பித்தத்துடன் சேர்ந்தால் ஏற்படும் உடல் தீ எது?

A) காலாக்கினி

B) விஷமாக்கினி

C) மந்தாக்கினி

D) தீக்ஷணாக்கினி

88 88 “வலியுடனே புறவீச்சு உள்வீச்சு வீக்கம்” என்னும் சதக நாடி பாடல் வரி எந்த நாடியை குறிக்கிறது?

A) வாதபித்தம்

B) வாத ஐயம்

C) பித்த வாதம்

D) கப வாதம்

89 89 அதிக பசி, விசனம், குளிர், அதிக நித்திரை முதலியவற்றால் நாடி நடை என்னவாகும்?

A) தீவிரமடையும்

B) படபடக்கும்

C) தெரியாது

D) குறையும்

90 90 கீழ்க்கண்டவற்றில் எந்த குன்ம வகை தீராது?

A) ஐய குன்மம்

B) அழல் குன்மம்

C) எரி குன்மம்

D) சர்த்தி குன்மம்

91 91 எலி விடத்திற்கு அப்பிரக பற்பம் எந்த சாற்றில் அனுபானித்து தரப்படுகிறது?

A) கையான் சாறு

B) இலைக்கள்ளி சாறு

C) துளசி சாறு

D) எருக்கிலை சாறு

92 92 கீழ்கண்ட நிலைகளில் எதில் தைராய்டு குருத்தெலும்பு முறிவு அரிதானது?

A) கையால் நெரித்தல்

B) பகுதி தூக்கிலிடுதல்

C) தூக்கிலிடுதல்

D) கயிற்றின் மூலம் இழுத்து நெரித்தல்

93 93 பிண விறைப்புத் தன்மை உச்சி முதல் உள்ளங்கால் வரை அடைய எவ்வளவு நேரம் ஆகிறது?

A) 10 மணி நேரம்

B) 20 மணி நேரம்

C) 12 மணி நேரம்

D) 13 மணி நேரம்

94 94 மனித உறுப்பு கொடை கொடுப்பது பற்றிய சட்ட வடிவு எந்த ஆண்டு இயற்றப்பட்டது?

A) 1990

B) 1991

C) 1994

D) 1995

95 95 பூரநஞ்சுக்கான முறிவு யாது?

A) துளசி

B) சிறுநெருஞ்சில்

C) நெய்ச்சட்டிகீரை

D) சிறுநாகப்பூ

96 96 ‘ராபிபியூர் ’ என்பது எந்த தடுப்பு மருந்தின் பெயர்?

A) டக் எம்பிரையோ வாக்ஸின்

B) பியூரிபைட் வெரோ செல் ராபீஸ் வாக்ஸின்

C) பியூரிபைட் சிக் எம்பிரையோ செல் கல்சர் வாக்ஸின்

D) ஹுயூமன் டிப்ளாய்ட் செல் வாக்ஸின்

97 97 “டார்ட்டிங்” நகர்வை வெளிப்படுத்தும் பாக்டீரியா எது?

A) சூடோமோனஸ் ஏரோஜினோசா

B) சால்மோனெல்லா டைஃபி

C) விப்ரியோ காலரே

D) எஷ்ஷரீஷியா கோலை

98 98 எந்த பரிசோதனை தொண்டை அல்லது தோலில் வரும் எல்லா வகை ஸ்டெரப்டோகாக்கஸ் பாதிப்பிற்கும் பாசிட்டிவ்வாக இருக்கும்

A) ஸ்டெரப்டோசைம் பரிசோதனை

B) ஏஎஸ்ஓ பரிசோதனை

C) ஆன்டிஹையாலுரோனிடேஸ் பரிசோதனை

D) ஆன்டி – டி.என்.ஏ ஏஸ் பி (Anti - DNA - ase B) பரிசோதனை

99 99 அணுமின் நுண்ணோக்கியை கண்டுபிடித்தவர் யார்?

A) ராபர்ட் காஷ்

B) பால் எர்லிஷ்

C) எர்ன்ஸ்ட் ரஸ்கா

D) ஆன்டனி வான் லூவன் ஹுக்

100 100 கீழ்காணும் தடுப்பு மருந்துகளில் எதில் கொல்லப்பட்ட நுண்ணுயிர்கள் உள்ளன?

A) பி.சி.ஜி (BCG)

B) சாபின் (SABIN)

C) டி. டி.ஏ.பி (DTaP)

D) எம். எம். ஆர் (MMR)